# வாக்குமூலம்
# சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.
# O.S.No.1258/2022
# வழக்கு சாட்சி P.W.1

**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்லப்பகவுண்டர் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செல்லப்பகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : எல்லப்பட்டி | வயது | : சுமார் 92 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 05.02.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**<u>1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>**

நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? எனது தோட்டத்தை 62 செண்ட் நிலத்தை கிரையம் செய்துவிட்டதாலும், கிணறு பாத்தியத்தை பொறுத்தும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ? சர்வே எண்.173/13 ஆகும். தாவா சொத்து எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? சரிதான். தாவா சொத்தானது எனது மாமனார் எழுதி வைத்த உயில் சாசனத்தின் வழியாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் ? சரிதான். எனது மாமனார் எழுதிக் கொடுத்த உயில் சாசனத்தில் தாவா சொத்தை பொறுத்து பொதுவில் பாதி பாத்தியம் என்று சரத்து கண்டு தான் உயில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் ? தவறுதலாக அவ்வாறு எழுதிக் கொடுத்துள்ளார். எனது மாமனாருக்கு பொதுவில் பாதி பாத்தியம் இருந்துள்ள காரணத்தினால் தான் பொதுவில் பாதி பாத்தியத்தை எனக்கு உயிலாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் ? சரியல்ல. பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் 1/4 பாக பாத்தியம் உள்ளதை நான் இவ்வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் ? சரியல்ல. எனது மாமனார் கருப்பணகவுண்டர் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான ஆவணத்தை தாக்கல்

செய்யவில்லை என்றால் ? அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தில் 17.08.1959ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் 1/4 பாகம் பங்கு பாத்தியம் உள்ளது என்றால் ? சரியல்ல. தாவா சொத்து எனக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து கிடையாது என்றால் ? சரியல்ல. எனது மாமனார் கருப்பணகவுண்டருக்கு உரிய பாகத்தை மட்டும் தான் எனக்கு உயில் சாசனத்தின் தன்மைபடி சொத்தினை எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் ? சரியல்ல. தவறுதலாக பாதி பாத்தியம் என்று எழுதிக் கொடுத்துவிட்டார். உயில் சாசனத்தில் கண்ட சொத்துக்கள் மட்டுமே எனக்கு பாத்தியம் என்றும், மற்ற சொத்துக்களை பொறுத்து எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் ? சரியல்ல. எனது மாமனார் கருப்பணகவுண்டரின் வாரிசுகள் தான் உயில் வழியாக எழுதப்பட்டது போக மீதி உள்ள சொத்திற்கு உரிமை கோர முடியும் என்றாலும், நான் உயிலில் கண்டுள்ள சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களுக்கு உரிமை கோர முடியாது என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.05 17:46:40 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்